# சமூக விஞ்ஞான கற்கை வட்டம்



## 01-09-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு
## தலைப்பு : பகவத் கீதை
## தொடக்கவுரையாடல் : ஐ. மனோறா

*ஐ. மனோறா அவர்கள் இந்து ஆன்மீகப் பார்வையில் பகவத் கீதை பற்றி விளக்கமளித்தார். பகவத் கீதை சொல்லும் யோக முறைகள் போன்றவற்றை அறிமுகப்படுத்தியதுடன் வடமொழியில் அமைந்த பகவத் கீதையின் சுலோகங்களைச் சொல்லிக்காட்டி அவற்றுக்கான அர்த்தத்தையும் விளக்கினார்.*

*அதனைத்தொடர்ந்து நிகழ்ந்த உரையாடலில் திரு இராஜரட்ணம் அவர்கள் முன்வைத்த கருத்துக்கள் வருமாறு,*

*Ø 700 கவிதைகளால் ஆக்கப்பட்டது, எடுப்பான மொழி, உருக்கக் காட்சிகள், அகத்தெழுச்சி படிமங்களால் ஆனது.*

*Ø ஓர் இந்துவின் தார்மீக நெறி கீதையின் கற்பிதங்கள் மூலம் உயிரூட்டம் பெறுகிறது.*

*Ø கீதை வெறும் போதனைகள் அல்ல, தத்துவம் அல்ல கற்பித்தல் பொருள் அல்ல, அது மனிதருக்கு உயிர்ரோட்டம் தருகின்றது. ஒரு நாட்டின் பண்பாட்டை மீள் உருவாக்கம் செய்கிறது.*

*Ø வேதங்களை விட கீதைக்கு முக்கிய இடம் உண்டு. காரணம்,*

1. *மக்களின் பிரச்சனைக்கு தீர்வு சொல்கிறது.*
2. *தேசிய இலக்கியமாக உள்ளது.*
3. *கூர்மதியும் சூழ்ச்சியும் நிறைந்தது.*
4. *ஆன்மிக வாழ்வின் மறை பொருளையும் ஒழுக்கத்தையும் கொண்டது.*
5. *விழுமிய சிந்தனை.*

*Ø கீதை கடந்த 18 நூற்றாண்டுகளாக இந்துக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

*Ø வேதகாலம் => ஆன்மிக தத்துவம்(கருத்துமுதல்வாதம்)*

*புலன் கடந்த இறையியல் பற்றிப் பேசுகிறது.*

*Ø பௌத்தம் => பகுத்தறிவுவாதம்*
*Ø மக்களை சிந்திக்கவிடாது, விளக்கம்கேட்கவிடாது, அமைதியாக ஏற்கும் அடிமைத்தனத்தை வளர்க்கவும் உயர் வர்க்கத்தால் கீதை ஆயுதமாக பாவிக்கப்பட்டது.*
*Ø புரட்சிக்கு எதிரான போராட்ட ஆயுதமாக கீதை பயன்பட்டு வருகிறது.*

*Ø பௌத்த எழுச்சிக்கு மரண அடி கொடுப்பதற்காக 9ஆம் சங்கராச்சாரியார் கீதையை நாடினார்.*

*Ø 20ஆம் நூற்றாண்டில் காந்தி மதச்சார்பற்ற சனநாயக வளர்ச்சியை அழிக்க கீதையை பயன்படுத்தினார்.*

*(மிகுதி அடுத்த பக்கம்)*

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

### அடுத்து வரும் தலைப்புக்கள்

**இலங்கையில் தமிழ் வானொலி - அன்றும் இன்றும்**
08-09-2011 | எஸ். எழில் வேந்தன்

**மின்வெளிக் குற்றங்கள் (Cyber Crime)**
15-09-2011 | இராமானுஜம் நிர்ஷன்



9/11

*சல்வதோர் அலன்டே (Salvador Allende Gossens (Spanish pronunciation: [salβa'ðoɾ a'ʝende 'ɣosens]; 26 July 1908 - 11 September 1973)*

*தொழில் ரீதியாக வைத்தியரான அலந்தே, சிலே நாட்டில் பெரும் மக்கள் ஆதரவுடன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அரசியற் தலைவராவார். மார்க்சியவாதி. சிலேயின் சோசலிஸ்ட் கட்சி உறுப்பினர்.*

*பெருமளவில் அமெரிக்க முதலாளிகளின் பிடியில் இருந்த சிலேயின் செப்புச் சுரங்கங்களையும் பெறுமதி மிக்க இயற்கை வளங்களையும் சிலே நாட்டின் தேசியச் சொத்தாக்கும் தேசியமயமாக்கற் கொள்கையினை அலந்தே முன்னெடுத்தார். இதனால் கிடைக்கும் வருமானத்தைப் பயன்படுத்தி சிலே மக்களதும் ஏழைகளதும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த உழைத்தார்.*

*அமெரிக்க முதலாளிகளுக்கும் பொருளாதாரத்துக்கும் இது மாபெரும் நெருக்கடியைத் தோற்றுவிக்கும் என்று பயந்த அமெரிக்கா தனது உளவுத்துறையான CIA இனைப் பயன்படுத்தி கோரமான மனிதப்படுகொலைகளூடான ஓர் இராணுவச் சதிப்புரட்சியை அரங்கேற்றி அலன்டே ஆட்சியைக் கவிழ்த்தது.*

*இறுதிவரை அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு அடிப்பணிய மறுத்த அலந்தே தனது உத்தியோகபூர்வ இருப்பிடத்தில் இருந்தபடி வான்தாக்குதலுக்கு நடுவிலும் மக்களுக்கு உரையாற்றிக்கொண்டிருந்தார். சதிப்புரட்சியின் முடிவில் ஜனாதிபதி இருப்பிடம் கைப்பற்றப்பட்டபோது (September 11, 1973) அலந்தே அங்கே பிணமாக மீட்கப்பட்டார். அவர் கையில் அவரது நெருங்கிய நண்பரான கியூப அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோ பரிசளித்த AK 47 துப்பாக்கி இருந்தது.*

*Given these facts, the only thing left for me is to say to workers: I'm not going to resign! Placed in a historic transition, I will pay for the loyalty of the people with my life. And I say to them that I am certain that the seeds which we have planted in the good conscience of thousands and thousands of Chileans will not be shriveled forever. They have force and will be able to dominate us, but social processes can be arrested by neither crime nor force. History is ours, and people make history.*

*- அலந்தே மக்களுக்கு ஆற்றிய இறுதி உரையிலிருந்து..*

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

**வலைத்தளம் :**
circle.thulaa.net

## பகவத் கீதை
## முன் பக்கத் தொடர்ச்சி..

Ø சாங்கியக் கோட்பாட்டை மறைத்து வாசுதேவ கிருஷ்ணனை கடவுளாக போற்றி புதிய வழிபாட்டு முறையை அறிமுகம் செய்கிறது.

Ø சாதியக் கட்டுப்பாடு தகர்க்கப்பட்டலாம் எனும் வேளையில் பிராமணர்களால் பகவத்கீதை எழுந்தது.

Ø கீதை இயற்றப்பட்ட வேளையில் கிருஷ்ணன் என்ற ஒருவன் குருசேத்திரத்தில் பிறக்கவில்லை சாதிக் கட்டுமானத்தை நிலை நாட்டவே இப்புனைவு தேவைப்பட்டது.

Ø சத்திரிய குல கிர்ஷ்ணனுக்கும் பாண்டவர் அர்ச்சுனனுக்கும் போர்க்களத்தில் நடந்த உரையாடல்தான் கீதை எனக் கூறப்படுகிறது.

Ø கீதை ஒருவரால் எழுதப்பட்டது எனக் கூறமுடியாது. வெவ்வேறு காலப் பகுதிகளில் வெவ்வேறு நபர்களால் எழுதப்பட்டது. காரணம்,

1. வேறுபட்ட மொழிநடை
2. எதிர்மறையான கருத்துக்கள்
3. சொற்பொருள் பயன்பாடு
4. சொற்றொடர் அமைப்பு

Ø முரண்பாடுகளின் ஒன்று திரண்ட உருவாக்கமே கீதை.

1. கீதை இந்துமத சிந்தனைகளின் கலப்பு
2. வேத கால யாக முறைகள்
3. உபநிடதம் கூறும் புலன் கடந்த பிரமம்
4. பாகவதம் காட்டும் பக்தி
5. சாங்கியத்தின் இறைமைக் கோட்பாடு
6. யோகம் காட்டும் தியானம்.

இவ் உண்மைகள் அனைத்தும் இறுதியில் ஓர் இடத்தில் சங்கமிக்கின்றன என்கிறார் ராதாகிருஷ்ணர்.

Ø கிருஷ்ண வாசுதேவன் தலைமை ஏற்பது கிருஷ்ண வழிபாடு மூலம் எதிரிகளை மழுங்கடிப்பது.

Ø எதிர்பாளர்களுக்கு விட்டுக் கொடுக்காது அமைதிப் பேச்சுக்கு அழைப்பு விடுப்பதே ஆரியரின் நோக்கமாக உள்ளது என்கிறார் ஹில்.

Ø வேத காலத்தில் ஆரியர்களால் அரக்கனாக ஒதுக்கப்பட்டு இருந்த கிருஷ்ணர் கீதையில் விஷ்ணு அவதாரமாக மாற்றப்பட்டதன் நோக்கம் பிராமணியம் மக்கள் மத்தியில் செய்த சூழ்ச்சி.

"நல்லனவாக தோன்றியவை இப்போ தீயனவாகத் தோன்றுகின்றது. இடம் இருப்பவை வலமாகவும் வலம் இருப்பவை இடமாகவும் மாறின. நன்மை தீமை இடம் மாறின" -லியோ டால்ஸ்டாய் (இந்தியாவின் கடந்த கால வரலாறும் இவ்வாறுதான் மாறியது)

Ø அரங்கில் உள்ள பார்வையாளர்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் நல்ல காட்சியை வியாசர் தெரிவு செய்துள்ளார்.

குருசேத்திர போரில் பின்பற்றப்பட்ட தீய நெறிமுறைகள்

1. ஈவிரக்கமற்ற குரூரம்,தார்மீக மதிப்புகள் போன்றவற்றை கைவிடுதல்.
2. மனித நேயமற்ற செயலில் ஈடுபடுதல்.
3. நாகரீகமின்றி நடத்தல்
4. மூர்க்கத்தனம்
5. மனித உள்ளத்தில் அவநம்பிக்கை,சரணாகதி உணர்வு மறு உலக நம்பிக்கை இவை தான் கீதையின் அடிப்படை தத்துவம்.

மகாபாரதப்போர் வரலாற்றில்

Ø பகுத்தறிவு பொருள்முதல்வாத அறிவு முன்நிறுத்திய பௌத்த புரட்சியை மீண்டும் மீட்க முடியாதபடி செய்தது.

Ø நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் அடியாக மாறியது.

Ø பிரமாணமும் அவர்களின் புலன் கடந்த சக்திகளும் மீளாக்கம் பெற உதவியது.

Ø பண்பாட்டு வளர்ச்சியை தாழ்மைப்படுத்தி விட்டது.

அர்ஜுனன் தேரோட்டி கிருஷ்ணனிடம்..

1. போர்புரிய நிற்கும் எனது உற்றாரைப் பார்த்து உடல் உறுப்புக்கள் தளர்கின்றன, உடல் நடுங்குகின்றது,மயிர் கூச்செறிகின்றது,காண்டிபம் கை நழுவுகின்றது, சருமம் எரிகின்றது, என்னால் நிற்க முடியவில்லை எல்லாம் தீய அறிகுறிகளாகக் காண்கிறேன் உறவினரைக் கொன்று நன்மை பெறமுடியாது எனக்கு வெற்றி வேண்டாம், அரசும் வேண்டாம், இன்பம் வேண்டாம். யாருக்காக அரசைப் பெறவிரும்புகின்றோமோ அவர்கள் வாழ்வையும் வளத்தையும் துறந்து போர்க்களத்தில் நிற்கின்றனர். ஆசிரியர்கள்,சகோதரர்கள்,மாமன்மார்கள்,மைத்துனர்கள் என்றும் பலர் போர்க்களத்தில் உள்ளனர். நான் கொலை செய்யப்படினும் அவர்களை கொல்ல உடன்படேன்.துண்டு நிலத்துக்காக இவர்களை கொல்வதா! இக் கொலை பாவத்தையே தரும். இது தர்மம் அன்று இப் பாதகச் செயலில் இருந்து தப்பிக்க வழி உண்டா?

" இவை அருஜுனனின் மேன்மையையும் மனிதமாண்பையும் காட்டுகிறது. இக் கூற்றுகள் பிராமணியத்தை முழுமையாக ஏற்கவில்லை என்பதையே காட்டுகின்றது."

"அர்ஜுனன் இக் கேள்விகளுடன் நிறுத்தியிருந்தால் கிருஷ்ணன் நீதி நெறி உரைப்பதற்கு வாய்ப்பு இருந்திருக்காது."

3. பார்ப்பனியப் பாதிப்பில் விளைந்த கூற்று

ஒரு குலம் அழிவதால் மரபுகள் அழியும் இதனால்
நெறிப் புரள்வு ஏற்படும் இதனால்
குல மாதர் கற்பை இழப்பர் இதனால்
சாதிக்கலப்பு ஏற்படும் இதனால்
இனம் அழியும் இதனால் எம்மவர் நரகத்திற்குச் செல்வர் இதனால் எமது முன்னோர்களுக்கு செய்யும் பிதிர்க்கடனை செய்யமுடியாது.
சாதிக் கலப்பு சாதி தர்மங்களையும் குல தர்மங்களையும் அழிக்கும்.

என்கின்றான் அர்ஜுனன்.மேலும்

கௌரவர்கள் நான் ஆயுதம் இன்றி நிற்கும் போது என்னைக் கொன்றால் அதுவே பேரின்பமாகும் என்கிறான்."இருதலைக்கொள்ளி எறும்பாக மனக் குழப்பமாக அர்ஜுனன் இருக்கும் சந்தர்ப்பத்தை பயன் படுத்தி இச்சகம் பேசி அர்ஜுனனின் தட்பெருமையை தட்டிக்கொடுக்கின்றான் கிருஷ்ணன்." அர்ஜுனன் அறிவு வழி சிந்திக்க விடாது அவனது உணர்ச்சியை தட்டி எழுப்பி பின்வருமாறு கூறுகின்றான்

1. மேன்மை, புகழ், சுவர்க்கத்தை தடுத்தல் போன்ற இந்த மனச்சோர்வு எவ்விதம் உன்னிடம் வந்தது.
2. ஆண்மையற்ற தன்மைக்கு அடிபணிந்து விடாதே இது உனது மேன்மைக்கு அழகு அல்ல இழிவையே தரும் இந்த மனத்தளர்வை உதறிவிடு."

கிருஷ்ணனரின் கனிவோடு கூடிய அறிவுரை அர்ஜுனனை மனம் மாறச்செய்தது."அர்ஜுனன்...நான் உனது சீடன் உன்னிடம் சரணாகதி அடைகின்றேன்,எனக்கு நல்லதைக் கூறுவாயாக, நான் ஆட்சியைப் பெற்றாலும் எனது உள்ளத்தை வாட்டும் துன்ப உணர்வு என்னை விட்டு நீங்கும் எனத்தோன்றவில்லை என்கிறான்." இந்த நிலையிலும் போரை விரும்பாது மனிதம் காக்கப்பட வேண்டும் என விரும்பினான் அர்ஜுனன்"

அறிஞர் போன்று பேசுகின்றாய். அறிஞர்கள் இறந்தவர்களுக்காகவோ இருப்பவர்களுக்காகவோ வருந்துவதில்லை என்கிறான் கிருஷணன்.

## இலங்கையில் தமிழ் வானொலி : அன்றும் இன்றும்

08-09-2011 அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு - எஸ். எழில்வேந்தன்

* இலங்கையில் தமிழ் ஒலிபரப்புத்துறையின் ஆரம்பம்.

* இலங்கை தமிழ் ஒலிபரப்புத்துறையின் முன்னோடிகளும் முக்கிய ஆளுமைகளும்

* பழைய கால இலங்கைத் தமிழ் வானொலியின் தராதரங்கள், கட்டுப்பாடுகள், ஒழுங்குகள், நடைமுறைகள்

* மொழி, சமூகம் தொடர்பான அக்கறைகள்

* ஆரம்பகால இலங்கை வானொலி செய்த ஆக்கபூர்வமான பணிகள் (மெல்லிசை, வானொலி நாடகங்கள், கர்நாடக இசை, கல்விச்சேவை .. )

* தொழிநுட்ப ரீதியாக இலங்கைத் தமிழ் ஒலிபரப்புத்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

* காலத்தோடு வானொலி நேயர்களில் ஏற்பட்ட மாற்றங்கள்

* இன்றைய FM கலாசாரம், அதிலுள்ள ஆக்கபூர்வமான பக்கங்கள், பின்னடைவான பக்கங்கள்

* வானொலியில் விளையாட்டுத்துறை ஒலிபரப்பு அனுபவங்கள். எதிர்கொண்ட சவால்கள்